**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**M.C. No. 4-2024**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பன்னீர் செல்வம் (PW2) | Date : | 09.09.2025 |
| Father Name | : | முத்தையன் | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. நான் எதிர்மனுதாரரின் சித்தப்பா என்றாலும், 1ம் மனுதாரரின் தம்பி என்றாலும் சரிதான். மனுதாரர் என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் குடும்ப பிரச்சனை சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரருக்கும் எனக்கும் நீண்ட காலமாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். மனுதாரர்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இந்திரகுமார், செந்தில் மற்றும் முத்துலெட்சுமி ஆவார்கள். செந்தில் என்பவர் மனநிலை குன்றியவர் என்றால் சரிதான். மனுதாரர்களின் உறவினர் மாசிலாமணியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. எதிர்மனுதாரர் சிறு வயதிலிருந்தே அவரது தாய் மாமா வீட்டில் தான் தங்கி படித்து வந்தார் என்றால் சரிதான். எதிர் மனுதாரரின் தாய் மாமா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் நன்கு படிக்க கூடியவர் என்றால் சரிதான். 1ம் மனுதாரருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என்ன வேலை செய்துவருகிறார் என்றால் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறார். 2020ல் எதிர்மனுதாரரின் தங்கைக்கு எதிர்மனுதாரர் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் இல்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் சேர்ந்து தான் திருமணம் செய்து வைத்தார்கள். கடந்த 2016ல் 2ம் மனுதாரருக்கு கர்பபை பிரச்சனை சம்பந்தமாக அறுவை சிகிச்சை நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கான செலவையும் எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3.எதிர் மனுதாரருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு குழந்தை ஆகும். எதிர்மனுதாரரின் திருமணத்திற்கு எதிர்மனுதாரரே முழு செலவையும் செய்தார் என்றாலும், மனுதாரர்கள் எந்த செலவையும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மனுதாரர்கள் தான் செலவு செய்தார்கள். செந்தில் என்பவருக்கு மன நோய் சம்பந்தமான சிகிச்சைக்கு எதிர்மனுதாரர் தான் செலவு செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதார்களுக்கு 4 மா புஞ்சை திடல் நிலம் உள்ளது என்றால் சரிதான். அதில் மனுதாரர்கள் தான் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மனுதாரர் அடிக்கடி மது அருந்திவிட்டு எதிர்மனுதாரரின் மனைவியுடம் தகாத முறையில் நடந்து கொண்டதால் தான் எதிர்மனுதாரர் மனுதாரர்களை விட்டு பிரிந்து வாழந்து வருகிறார் என்றால் சரியல்ல.

4. எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் செய்து முடித்து விட்டார் என்றால் சரியல்ல. எதிர் மனுதாரருக்கு அவரது வருமானத்தை மிஞ்சிய கடன் இருப்பதால் அவரால் மனுதாரர்கள் கோரும் பராமரிப்பு தொகையை கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. 1ம் மனுதாரர் எனது உடன் பிறந்த சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.